DEPOSITION OF WITNESS

(CHAPTER XXIII Code of Criminal Procedure)

---

IN THE COURT OF IV ADDITIONAL DISTRICT & SESSIONS JUDGE, MADURAI

**S.C. No.422/2017**

**P.W.7**

DEPOSITION OF WITNESS FOR PROSECUTION DEFENCE COURT

NAME : பிரதீப்

Father Name : பாண்டி

VILLAGE :

CALLING :

AGE :

Solemnly affirmed in accordance with the provisions of Act X of 1873 of the day of 04.08.2025.

(3 வது எதிரி இறந்துவிட்டார். 1, 2, 4, 5 மற்றும் 6 எதிரிகள் ஆஜர். )

<u>அரசு தரப்பில் முதல் விசாரணை :</u>

நான் தற்போது பெரியார் நிலையம் அருகிலுள்ள மாலை கடையில் வேலை பார்க்கிறேன். எனக்கு வழக்கு பற்றி எதுவும் தெரியாது. போலிசார் என்னை விசாரிக்கவில்லை.

**(சாட்சியை பிறழ்சாட்சியாக அறிவிக்க கோரி அரசு தரப்பு வழக்கறிஞர் வேண்டியதன் அடிப்படையில் சாட்சி பிறழ்சாட்சியாக பாவிக்கப்பட்டு அரசு தரப்பு வழக்கறிஞர் மேலும் விசாரிக்க அனுமதிக்கப்படுகிறார் )**

<u>அரசு தரப்பு குறுக்கு விசாரணை :-</u>

நான் போலிசார் விசாரணையின் போது கடந்த 03.01.2016 ம் தேதி காலை 8 மணிக்கு பூ வியாபாரம் செய்து கொண்டிருந்த போது வீரபாண்டிய கட்டபொம்மன் சிலைக்கு மதியம் சுமார் 01.15 மணியளவில் TN 65 E 2325 என்ற டாடா சுமோ காரில் வந்தவர்கள் போலிஸ் வீடியோகிராபரை பார்த்து அசிங்கமாக பேசி, அங்கிருந்த ஏட்டையாவின் வலது கன்னத்தில் உடம்பிலும் மாறி மாறி கையால் அடித்தும், போலிசாரை வேலை செய்ய விடாமல் கேமராவை பிடுங்கி சேதப்படுத்தினார்கள் என்றும், அவர்கள் கல் எறிந்ததில் திலகர் திடல் A.C. டிராபிக் A.C. மற்றும் SS காலனி சார்பு ஆய்வாளர் ஆகியோர்கள் மீது பட்டு காயம்

ஏற்பட்டது என்றும், அனைவரையும் பிடித்து காவல் நிலையத்திற்கு விசாரணைக்கு சென்றுகொண்டிருந்தார்கள் என்றும் போலிசார் விசாரணையில் கூறிவிட்டு தற்போது உண்மைக்கு மாறாக சாட்சியமளிக்கிறேன் என்றால் சரியல்ல.

**எதிரிகள் தரப்பு குறுக்கு விசாரணை –** இல்லை.

**மறு விசாரணை –** இல்லை.